# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

**Calendar** : **CC. 78/2015**
**Miscellaneous** :
**Summary Trial** :
**Maintenance** :
**Deposition of witness for prosecution** : **P.W.1. பெருமாயி**
**Husband Name** : **சின்னராஜா**
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.02.2021

மு.வி:

நான் பண்ணைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிப்பட்டியலிலுள்ள சாட்சிகள் 2 முதல் 6 வரையிலான சாட்சிகளை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு சாயங்காலம் 3.30 மணியளவில் பொய்யாமணி தரப்பினரும் மற்றொரு தரப்பினரும் சண்டையிட்டுக்கொண்டார்கள். நான் பால் சட்டியை எடுத்துக்கொண்டு பண்ணைப்பட்டி காலனி தெருவில் நடந்து சென்றபோது மதியம் 3.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் என்னை அடித்தார்கள். அப்போது ராஜபாண்டி தன் கையில் வைத்திருந்த கத்தியால் குத்தவந்தார். 1வது எதிரி முனியாண்டி ஓட்டை எடுத்து எனது மண்டையில் அடித்தார். 2வது எதிரி பாண்டி இரும்பு வாளியிலிருந்த ஊரல்தண்ணீரை என் மீது ஊற்றி அடித்துவிட்டார். எல்லா எதிரிகளும் சேர்ந்து மொத்தமாக என் உடம்பெல்லாம் அடித்தும், மேலும் தலையில் அடித்ததில் இரத்தக்காயம் ஏற்பட்டது. சண்டையின் போது எதிரிகள் என்னை தாக்கியதால் என் காது கேட்கும் திறன் இன்று வரை குறைவாக உள்ளது. எதிரிகள் அடித்ததால் மயக்கி விழுந்துவிட்டேன். அப்போது சாட்சி பொய்யாமணி மற்றும் மீனம்பாள் சம்பவத்தை விலக்கிவிட்டு என்னை தூக்கி உசிலம்பட்டி அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். நான் 11நாள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது. புகார் வாக்குமூலம் **அசாஆ1**. நான் மருத்துவமனையிலிருந்தபோது போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றுச்சென்றார்கள்.

கு.வி.

எதிரிகள் தரப்பினருக்கும், உங்கள் தரப்பினருக்கும் சந்தன மாரியம்மன் கோவில் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரிதான். கோவில் பிரச்சனை சம்பந்தமாக நீங்கள் எதிரிகள் வகையறாவுடன் பேசிக்கொள்ள மாட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பெயர் சிட்டம்மாள் என்று சொன்னால் சரியல்ல. எனது அடையாள அட்டை உட்பட அனைத்து ஆவணங்களிலும் பெருமாயி என்று தான் உள்ளது. பொய்யாமணி புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் கொடுத்தேன். எனது ஊரைச்சேர்ந்த பொய்யாமணியின் மகள் பிரதீபா என்பவரை மலைச்சாமி என்பவர் காதல் திருமணம் செய்து கொண்டார் என்ற விபரம் தெரியுமா என்று சொன்னால் தெரியும். மலைச்சாமி குடும்பத்தில் உங்கள் குடும்பத்திலிருந்து பெண் எடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் குடும்பத்திற்கும், உங்கள் குடும்பத்திற்கும் இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு முன்பு எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் சரிதான். கிண்ணிமங்கலத்தைச்சேர்ந்த நபருடன் பிரதீபாவுக்கு திருமணம்பேசி முடித்து திருமண அழைப்பிதழ் அடிக்கப்பட்ட விபரம் உங்களுக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது. டீக்கடைக்கு முன்பு எதிரிகள் மலைச்சாமியின் தகப்பனாரைப்பார்த்து பிரதீபாவிற்கு கிண்ணிமங்கலத்தில் மாப்பிள்ளை பார்த்து திருமண அழைப்பிதழ் அடித்தபின்பு உன் மகன் பிரதீபாவை அழைத்து சென்றது சரியா, தவறா என்று கேட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த டீக்கடைக்கு எதார்த்தமாக தான் வந்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த நேரத்தில் நீங்கள் பொய்யாமணியுடன் சேர்ந்துகொண்டு எதிரிகளை வாய்வித்தியாசமாக பேசினீர்கள் என்று சொன்னால் சரியல்ல. புகார் நீங்கள் எழுதிக்கொடுத்தீர்களா என்று சொன்னால் நான் சொன்னேன் போலீசார் எழுதிக்கொண்டார்கள். நீங்கள் சொன்ன வாக்கு மூலத்தை விட மிகைப்படுத்தி போலீசார் புகாரில் எழுதிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், பொய்யாமணி தரப்பினருக்கும் தள்ளுமுள்ளு நடந்தது என்றும், நீங்கள் இடையில் சென்றதால் நீங்கள் தெரியாமல் கீழே விழுந்ததால் உங்களுக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் தான் அடித்தார்கள். மொத்தம் எத்தனை நபர்கள் மீது புகார் கொடுத்தீர்கள் என்றால்

9நபர்கள் மீது புகார் கொடுத்தேன். போலீசார் சம்பவத்திற்கு பிறகு உங்களை விசாரித்தார்களா என்று சொன்னால் என்றால் சரிதான். எனது ஊரைச்சேர்ந்த முத்து மகன் சின்னப்பாண்டி என்பவரை சாட்சியாக தான் சொல்லியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். எதிரிகளுக்கும், பொய்யாமணிக்கும் தான் பிரச்சனை என்றும், பொய்யாமணிக்கு ஆதரவாக பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொன்னமாதிரி, வாளியை எடுத்தோ, ஓட்டை எடுத்தோ அடிக்கவில்லை என்றும் கெட்ட வார்த்தை பேசவில்லை என்றும், கத்தியைக்காட்டி உங்களை மிரட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கோவில் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d./ Perumayi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.